# அடிப்படைத் தமிழ்

## தாள் - 1 முதற்பருவம்

நோக்கம்

தமிழ் மொழியின் அடிப்படைகளை அறிந்து கொள்ளுதலும், தமிழ்மொழியை எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்ளுதல்.

அலகு - 1 எழுத்துகள் அறிமுகம் - எழுத்துகளின் வகைப்பாடு உயிரெழுத்துக்கள் - எண்ணிக்கை. மெய் எழுத்துகள் எண்ணிக்கை. எழுத்துகளின் ஒலி அளவு, குறில், நெடில்.

அலகு - 2 ஆயுத எழுத்து - சுட்டெழுத்துகள் - வினா எழுத்துகள் இன எழுத்துகள் - உயிர்மெய் எழுத்துகள் - வடமொழி எழுத்துகள் ஒலிகளுக்கேற்ற தமிழ் வடிவிலான எழுத்துகள்.

அலகு - 3 எழுதும் பயிற்சி, தமிழ் எழுத்து வடிவங்களைக் காட்டி அவைகளை ஒலிக்க செய்தல். இனங்களை வேறுபடுத்தி அறிதல். கோடு பெறுவன, கொம்பு பெறுவன கீழ் விலங்கு, மேல் விலங்கு பெறுவன என்பவைகளை விளக்குதல்.

அலகு - 4 எழுத்துகளை ஒலிக்கச் செய்து அவைகளை எழுதவைத்தல். குறில், நெடில் வேறுபாடுகளை அறியச் செய்தல், ண, ந, ன போன்ற எழுத்துகளின் ஒலிப்பியல் வேறுபாடுகளையும், ர, ற, போன்ற எழுத்துகளின் ஒலிப்பியல் வேறுபாடுகளையும், ல, ள, ழ, போன்ற எழுத்துகளின் ஒலிப்பியல் வேறுபாடுகளையும் அறியச் செய்தல்

அலகு - 5 சொற்களுக்கு முதலில் வரும் எழுத்துகள், இறுதியில் நிற்கும் எழுத்துகளைக் கூறுதல், இதன் வாயிலாக தமிழ் அல்லாத மொழிச் சொற்களை விலக்குதற்கு வழிகாட்டல்.

# அடிப்படைத் தமிழ்

## தாள் - 2 இரண்டாம் பருவம்

அலகு - 1 சொற்களைக் கற்றல் - பேச்சுவழக்கு, எழுத்து வழக்குச் சொற்களின் இனம் பிரித்து அறிதல். கோடிட்ட இடங்களை நிரப்புவதன் வாயிலாக எழுத்துகளையும் சொற்களையும் பயிற்றுவித்தல்.

அலகு - 2 வழக்கில் பயன்படுத்தப்படும் இயல்பான வடமொழிச் சொற்களுக்குரிய முறையான தமிழ்ச் சொற்களை எழுதுதல். தமிழ்ச் சொற்களுக்கு இணையான ஆங்கிலச் சொற்களை அறிதல்.

அலகு - 3 சிறு சிறு சொற்றொடர்களைக் கற்றல் - எளிய தொடர்களை அறிமுகப்படுத்தல். எழுவாய் பயனிலைகளை விளக்குதல். சிறு சிறு சொற்றொடர்களை எழுதும் பயிற்சி தருதல்.

அலகு - 4 சொற்றொடர்களில் செய்தி வாக்கியம், உணர்ச்சி வாக்கியம், கலவை வாக்கியம் என்பவைகளை விளக்கி எழுதுவதற்குப் பயிற்சி அளித்தல்.

அலகு - 5 சிறு சிறு பாடல்களை அறிமுகம் செய்தல், நிறுத்தக் குறிகளோடு படிக்கச் சொல்லுதல் அறநெறிக் கதைகள், அறிவுரைகள் போன்றவற்றைக் கற்று பிழையின்றி எழுதவும் படிக்கவும் செய்தல்.

# அடிப்படைத் தமிழ்

## தாள் - 3 மூன்றாம் பருவம்

அலகு - 1 அன்றாட வழக்கில் பயன்படுத்தப்படும் காய், கனிகள், பழங்கள் இவைகளுக்குரிய சொற்களை அறிதல். அவைகளைக் கொண்டு பொருள்படும் சொற்றொடர்களை அமைக்கச் செய்தல்.

அலகு - 2 குடும்பம் என்பதை விளக்குதல் - குடும்ப உறுப்பினர்கள் - உறவு முறைகளைக் குறிப்பிடும் சொற்கள் - உறவுமுறைகளைக் கூறி அவைகளைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதச் செய்தல்.

அலகு - 3 உணவு வகைகள்- தமிழர் உணவு வகைகள் - உணவு முறைகள் - உணவு பரிமாறும் முறை - உணவுக் கலங்கள் - விருந்தினர் - விருந்தினரை உபசரிக்கும் முறை இவைகளை விளக்குதல் - அறியச் செய்தல்.

அலகு - 4 இயற்கையை அறிதல் - நீரின் இன்னறியமையாமை - மேகம் - மழை - அருவி - ஆறு - கடல் - ஊற்று - குளம் - ஏரி - வாய்க்கால் இவைகளின் விளக்கம் - பயன்பாடு இவைகளை அறியச் செய்தல்.

அலகு - 5 இயற்கைக் காட்சிகளை விளக்குதல் - மலை, காடு, கடல் இவைகளின் இன்றியமையாமை. சுற்றுப்புறச் சூழலின் தேவை. இயற்கையோடு இயைந்த வாழ்வில் கொள்ள வேண்டியன, தள்ள வேண்டியன இவைகளை விளக்குதல்.

# அடிப்படைத் தமிழ்
## தாள் - 4 நான்காம் பருவம்

அலகு - 1 பாரதியார் - பாரதியார் பற்றிய வரலாறு அவரது கவிதைகளின் பாடு பொருள் - வகைமை - ஓரிரு பாடல்களைப் படித்துக் காட்டுதல் - விளக்குதல் - படிக்க - பாடச் செய்தல். இரும்பொறை - மண்ணின் தன்மான உணர்வினை அறியச் செய்தல் - புறநானூற்றுப் பாடலை விளக்குதல் - நாடகப் பாங்கினை விளக்குதல் - உணர்ச்சி மிக்கத் தொடர்களை, சொற்களை வாசிக்கச் செய்தல்.

அலகு - 2 சுற்றுலா - சுற்றுலாவின் தேவை - இன்றியாமை. மாமல்லபுரம் அமைந்துள்ள இடம் - கலை வரலாற்றுப் பின்னணிகள் - கலைக்கோயில் புடைப்புச் சிற்பங்களை விளக்குதல்.
பயணம் - பேருந்துப் பயணம் - பயணம் செய்யும் முறையை விளங்கவைத்தல் - வாசிக்கவும் எழுதவும் பயிற்சி தருதல்.

அலகு - 3 வாழ்த்துப் பாடல் - வாழ்த்து விளக்கம் வாழ்த்துகளின் வகை - நாட்டு வாழ்த்து - இறைவாழ்த்து - தலைவர்களை வாழ்த்துல் - மொழி வாழ்த்து - வகைக்கு ஒரு பாடலை எடுத்து விளக்குதல் இவைகளுக்கிடையே உள்ள வேறுபாடுகளை அறிதல்.

அலகு - 4 உரையாடல் - இயல்பான பேச்சு - மேடைப் பேச்சு - கொள்ளும் முறை - தள்ள வேண்டியன, தவிர்க்க வேண்டியன எவை எவை எனக் கற்பித்தல், குழந்தையும் கல்வியும் எனும் பொருளில் உரையாடச் செய்து, உரையாடலில் சிறிய சொற்றொடர்களையும், மரபுத் தொடர்களையும் கையாளப் பழக்குதல்.

அலகு - 5 கடிதம் - கடிதம் பற்றிய விளக்கம். கடிதங்களின் வகைகளை அறியச் செய்தல் - நட்புக் கடிதம் - உறவுமுறைக் கடிதம் - அலுவலகக் கடிதம் - எழுதப் பயிற்றுவித்தல் - மொழிக் கூறுகளை விளக்குதல்
நேர்காணல் - முறை - வினாக்களைச் சீர் அமைத்தல் யாராகிலும் ஒரு விளையாட்டு வீரர் அல்லது சாதனையாளரை நேர்காணச் செய்வதாக வினாக்களை எழுதி வகைப்படுத்தல்.